**IN THE XII ASSISTANT CITY CIVIL COURT, CHENNAI**

**O.S.No.6189/2024**

Name : A. Pandurangan
Father/Husband Name : M. Arumugam
Age : 59
Witness for Plaintiff/defendant : PW4
Address : No.R43, 7th Street, TNHB Colony, Velachery, Chennai – 42.

Solemnly affirmed in accordance with the provisions of Section X of Indian Evidence Act 1873 on the 27th Day of April 2026.

---

**4 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

கூடுதல் பிரமாண வாக்குமூலம் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் அளவீடு செய்த போது பிரதிவாதி அந்த இடத்தில் இல்லை என குறிப்பிட்டுள்ளதால் அதற்குஉண்டான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். மேலும் தகவல் தெரிவித்து விட்டதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். 4 ஆம் பிரதிவாதிக்கு அதிகாரிகள் அளப்பது சம்மந்தமாக அறிவிப்பு கொடுத்தார்களா என்றால் அது எனக்கு தெரியாது. நான் சொத்தினை அளப்பதற்கு தொகை செலுத்தினேனா என்றால் தொகை எதுவும் செலுத்தவில்லை, கடிதம் கொடுத்தன் பேரில் அளந்தார்கள். நான் அளந்ததாக சொல்லும் தேதியில் தாவா சொத்து யார் வசம் இருந்தது என்றால் என் வசம் இருந்தது. அதில் 7 சென்டிமீட்டர் பக்கத்து வீட்டுக்காரரன ஜெயமணி ஆக்கிரமிப்பு செய்திருந்தார். 4 ஆம் பிரதிவாதி வீடு எந்த வருடம் கட்டப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. 4 ஆம் பிரதிவாதி கட்டிடம் 30 வருடமாக அங்கு உள்ளதை நான் மறுக்க இயலுமா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது அதனால் அதை மறுக்க முடியாது. 4 ஆம் பிரதிவாதி எப்போது வீடு கட்டினார் என்பதை அறிந்து கொள்ள முயன்றேனா எ ன்றால் 2007 ல் நான் கிரையமம் பெற்றபோது 4 ஆம் பிரதிவாதியின் தரைத் தளம் வரை உள்ள வீடு இருந்தது. தரைத்தளத்திற்கு மேல்தான் முதல் தளம் கட்டினார் என்றால் நா்ன வாங்கிய பிறகு அதன்மேல்தான் முதல் தளம் கட்டினார். 4 ஆம் பிரதிவாதி முதல்

தளம் கட்டும்போது நான் அதனை ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரிதான். அப்போது அது குறித்து தெரியாது. தாவா சொத்தை அளந்ததாக சொல்லப்படும் நபர்கள் அதிகாரம் பெற்ற அளவையர்கள் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூடுதலரக தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இ ல்லை என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

XII Assistant Judge